உதாரணமாக ஓர் இயந்திரம் 25 அடி நீளமுள்ள 1“x3“ கனமுள்ள சட்டங்கள் 24 பக்கம் பக்கமாக வரிசை வைத்து கம்பி அளவுபோட, இயந்திரத்தை திருப்பினால் 5 நிமிடத்தில் தொளையைப் போட்டு இணைப்பைச் செலுத்தி அளவுப்படி துண்டும் போட்டுவிடுகிறது. பிறகு ஆள்கள் எடுத்துச் சேர்த்து, கம்பிகோர்த்து ஆப்பு இறுக்கி அடுக்க வேண்டியதுதான். இப்படியே கட்டடத்துக்கு வேண்டிய மற்ற காரியங்களையும் செய்து , ஒரு நாளைக்கு பல வீடுகள் முடிக்கலாம்.

### பேதம் பெருமளவு குறையும்!

ஒரு 10 ஆண்டில் வீடு கஷ்டம் இந்த ஒரு இலாகாவால் ஒழிந்துவிடும்.

அதுபோல் ஏராளமான தண்ணீரை இறைக்கும் இயந்திரம் மோட்டார், எண்ணெய், இன்ஜீன் செய்து வாடகைக்குச் சர்க்கார் உதவி செய்யலாம் இப்படியே பல இலாகாக்களால் 10 ஆண்டில் உணவு, உடை, வீடு குறை நீக்கலாம்.

இவற்றால் எல்லா மக்களிடையேயும் பேத உணர்ச்சி போதாமை, கவலை , மனிதனுக்கு மனிதன் அன்பில்லாமை வெறுப்பு, பொறாமை ஆகியவை பெரும் அளவுக்கு குறையும்.

இது குறைந்த இடங்களில் திருப்தி, மகிழ்ச்சி, ஒற்றுமை, அன்பு வளரும். கொள்ளை, திருட்டு, மோசம், துரோகம், வஞ்சகம் ஆகிய காரியங்களுக்கு அவசியமும் இடமும் இருக்காது. இப்படிப்பட்ட தன்மைக்கு எந்தப் பேர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்.

பகுத்தறிவு உள்ள மனித சமுதாயம் இன்றுள்ள நிலையில் இருப்பது பெரும் மானக்கேடு! மானக்கேடு!!



# இந்நூல்!

உயர் எண்ணங்கள் மலரும் சோலை என்று தந்தை பெரியார் அவர்களைப்பற்றி கருத்துமணக்கப் பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். தந்தை பெரியார் அவர்களின் சிந்தனைச் சுடர்கள் மனித சமுதாயத்தை ஒரு புத்தம் புதிய உலகிற்கு அழைத்துச் செல்கின்றன. பல்லாயிரம் வருட காலமாக, செக்குமாட்டுச் சுபாவத்தோடு இருந்த மனித வாழ்வை மாற்றி, ஒரு புத்தம்புதிய திருப்பத்தைத் தந்து, ஒரு புதிய உலகை நிர்மாணிக்கும் வளம் நிறைந்தவைதான் தந்தை பெரியார் அவர்களின் ஆழ்ந்த கருத்துக் கருவூலங்கள்.

தந்தை பெரியார் அவர்கள் படைக்கும் அந்தப் புதிய உலகில், ஆண்-பெண் கூட்டு எப்படி இருக்கும் சொத்துரிமைக்கு அங்கு இடம் உண்டா? உணவுமுறை - உடைமுறைகளில் எல்லாம் எப்படி அமைந்திருக்கும் என்று அறிய விரும்புகின்றவர்களுக்கு இச்சிறு நூல் ஊட்டச் சத்தாக அமையும்.

தந்தைபெரியார் அவர்கள் எதையும் ‘அழிக்’ ‘ஒழிக’ என்று சொல்பவரே தவிர, அதற்கொருமாற்று வழிதரும் போக்கினரல்ல என்று போதிய சிந்தனா சக்தியின்றிப் பேசும் குருட்டு மனிதரும், விழிபெரும் வண்ணம் தந்தை பெரியார் அவர்கள் அவ்வப்போது வழங்கிய சிந்தனை மலர்கள் “பெரியார் ஒரு வாழ்க்கைநெறி” என்ற ஒரு சிறு நூலாகத் தொகுத்துத்தரப்படுகின்றன. அந்தப் புதிய உலகைக் காணுங்கள்.

## உணவு முறை

ஆறு அறிவு படைத்த நமக்கு இன்று ஏற்பட்டுள்ள பெருங் கவலையும், குறையும், தொல்லையும் "உணவு விஷயத்தில் பஞ்சம் - தேவை'' என்பது முதலாவதாகும். இப்படிப்பட்ட கவலை தோன்று வது பைத்தியக்காரத்தனமான குறைபாடேயாகும். ஏனெனில் முதலா வது இக்குறை நமக்கு நாமாகவே ஏற்படுத்திக்கொண்ட முறையாகும். எப்படியென்றால்,

(1) நம் மக்களுக்கு அரிசிச்சோறு தேவை அற்றதும், பயனற்றது மாகும்;பழக்கமற்றதுமாகும். நம்வயல்கள் எல்லாம் சமீபத்தில் ஓராயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் உண்டாக்கப் பட்டவைதான்.

(2) நாம் மாமிசம் சாப்பிடுவதைவிட்டு, காய்கறிப் பண்டங்களை உண்பதும் நமக்குக் கேடான பழக்கமாகும். இவைகளும் அரிசிக்குப் பின் உண்டாக்கப்பட்டவைகளே.

காப்பி சாப்பிடுவது என்ற கெட்ட வழக்கம் நம் நாட்டில் ஏற்பட்ட பிறகு, பாலுக்கும் சர்க்கரைக்கும் பஞ்சம் தீர்ந்தபாடில்லாமல், நிரந்தரப் பஞ்சமாகி வருகிறது. நெல்விளையும் நிலங்களில் நல்ல அளவுக்கு கரும்பு பயிராக்கப்பட்டு வருகிறது. பாலெல்லாம் பெரிதும் காபிக்குச் செலவாகிறபடியால், நாட்டுக் குழந்தைகள் பெரிதும் உரம் பெற முடியாமல் தேவாங்குகளாகவே வளரவேண்டிய தாகி விட்டன. மற்றும், சத்துள்ள தயிர், மோர், நெய் ஒரு சிலருக்குத் தான் கிடைக்கிறது.சர்க்கரை ஏறக்குறைய 90 பாகம் காபிக்கே செலவாகிற படியால் விளைநிலம், நல்ல சர்க்கரை உற்பத்தி செய்யப் பட்டாலும், சர்க்கரைப் பஞ்சம் வளர்ந்துகொண்டே வருகிறது பால் பஞ்சமும் அப்படியேதான் வளர்ந்துகொண்டே போகிறது. அனாவசியமாகச் சத்தற்ற காய்கறிகள் உண்ணும் வழக்கம் வளர்ந்து, வேளாண்மைக் கேடும், பயனற்ற உணவு வளர்ச்சியும், ஏற்பட்டுப் "போதிய அரிசி கிடைப்பது" கஷ்டமாகி விடுகிறது.

இவைகளின் பயனாய் மனிதனின் உணவுச் செலவு, அதுவும் சத்தற்ற உணவுக்குச் செலவு 100-100 விகிதம் ஆகப்பெருகி, வாழ்க்கைச் செலவுக்குப் பணம் போதாத நிலையே வளர்கிறது.



- தனிப்பட்டவர்கள் லேவாதேவி செய்ய அனுமதிக்கக் கூடாது.
- உணவு, உடை, ஸ்டோர்கள் (விற்பனை இடங்கள்) தனிப் பட்டவர்களுக்கு இல்லாமல் சர்க்காருடையதாக ஸ்தல ஸ்தாபனங்களுடையதாக சர்க்கார் ஆதிக்க கூட்டுறவு ஸ்தாபனங்களுடையதாக இருக்க வேண்டும்.

### சரி பகுதி பெண்களுக்கே!

- பண்ட உற்பத்தியை சர்க்கார் காண்ட்ராக்ட்டுக்கு (குத்தகைக்கு) விட்டு சேகரிக்கலாம்; அல்லது தொழிற் சாலை உற்பத்திகளை சர்க்கார் வாங்கிக்கொள்ளலாம்.
- உத்தியோகங்கள், சரிபகுதி பெண்களுக்குக் கொடுக்க வேண்டும்.
- ஆசிரியர் பயிற்சி 100-75 க்கு குறையாமல் பெண்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.
- ஆண்களுக்கு ஆசிரியர் வேலை கொடுப்பதானால் பெண் ஆசிரியர்களது கணவன்மார்களுக்குக் கொடுக்கலாம்.
- சர்க்காருக்கு ஏராளமான வீடுகள் சொந்தமாக இருக்க வேண்டும். அதற்காகவே நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் ஒதுக்கிவைத்து தனி இலாகா வேலை செய்ய வேண்டும்.
- தச்சர் , கொத்தர்களை சர்க்கார் சாதாரண மேஸ்திரிகள் கீழ்பயிற்சி கொடுத்து அதிகமாக உண்டாக்கவேண்டும்.
- காடுகளில் மரம் "சைஸ்" ( தேவைக்கு ஏற்றபடி ) செய்ய வேண்டும்.

### இயந்திர வசதிகள் பெருகவேண்டும்!

இயந்திரவசதி மூலம் செய்தால் 500 பேர்கள் உள்ள தச்சுப் பட்டறையில் 1 நாளைக்கு 1000 ஜன்னல் கூடும் 1000 நிலவுக்கூடும் செய்யலாம்.

## உற்சவங்கள் ஒழியவேண்டும்
## கண்காட்சி அமைய வேண்டும்

- மடம் மடாதிபதி, குரு ஆகியவகைளும், கோயில் சொத்து, மடசொத்து ஆகியவைகளும் எடுபடவேண்டும்.

- உற்சவங்களை நிறுத்தி, கண்காட்சி விழாக்கள் நடத்த வேண்டும்.

- யாவருக்கும் ஒரு மாதிரி உடை, ஒரு மாதிரி சாயல் ஏற்படுத்த வேண்டும். நகரங்களில் தொழிற்சாலைகள் தவிர மற்ற கட்டடங்கள், குடி இருக்கும் வீடுகள் ஒன்று இரண்டு மூன்று தரத்துக்கு அடங்கிய ஒன்று போன்ற அளவு வசதி உள்ளதாக இருக்க வேண்டும்.

- மொழிகளில் மக்களை மதிப்பிட ஒருமை பன்மை உயர்வு தாழ்வு குறிப்பு ஆகிய சொற்கள் இருக்கக் கூடாது.

- ஆண், பெண் தன்மையில் கண்டிப்பாய் தங்கள் வாழ்க்கைத் துணையை அவரவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள விட்டுவிடவேண்டும்.

- யாவருக்கும் ஆரம்பக் கல்வி 10 வயதுக்குள் கொடுக்கப்பட்டே ஆக வேண்டும்.

- எஸ்.எஸ்.எல்.சி க்கு மேல் பொது உத்தியோகத்துக்குப் படிப்பு யோக்கியதை வைக்காமல் சம்பளத்தையும் அதிக வித்தியாசம் ஆக்காமல் திட்டப்படுத்த வேண்டும்.

## லாபம் வரையறுக்கப்பட வேண்டும்

- அவசியமில்லாத வசதிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

- லாபம் வரையறுக்கப்பட்டுவிடவேண்டும்.

- அதிக பெறுமானமுள்ள நகைகள் அணிந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது.



## மாற்றம் அவசியமே

இவைகளில் மாற்றம் ஏற்படுத்துவது என்பது கடவுள், மதம், வேதம் விஷயத்தில் மாற்றம் ஏற்படுவதைவிட மிகக் கஷ்டமான காரியமாகவே இருக்கின்றது.

பார்ப்பானும் சைவனும் மாமிசம் சாப்பிடுவதில்லை. அதனால் அவர்கள் தங்களுக்குப் பெருமை ஏற்படுத்திக் கொண்டதோடு அல்லாமல், மற்றவர்களைப் பற்றிச் சிறிதும் கவலை இல்லாது இருக் கிறார்கள். அதோடு, அவர்கள் மாமிசம் சாப்பிடுவதை வெறுப்பதும், தாழ்வாய் கருதுவதுமான முறையில், மாமிசம் சாப்பிடுபவர்களை இழிவாய், கீழ் மக்களாய் கருதுகிறார்கள்.

இந்தப் பார்ப்பனரின் முன்னோர் ஆடு, மாடு மாத்திர மல்லாமல் , பன்றி, கழுதை, குதிரை, எருமை, மனிதன் வரை சாப்பிட்டதாக இவர்களே உண்டாக்கி வைத்திருக்கும் வேத, சாஸ்திர, மத ஆதாரங்களை மறந்துவிட்டு வக்கணை பேசுகிறார்கள்.

ஆகவே, இன்றை தினம் நம் உணவு விஷயங்களில் பெரும் மாற்றம் செய்யவேண்டியது இரண்டாந்தர, மூன்றாந்தர வாழ்க்கைத் தரத்தின் உண்மைகளைப் பொறுத்தவரையாவது மிக மிக அவசியமாகும்.

முதலாவது, மக்கள் காபி சாப்பிடுவதைக் கண்டிப்பாகத் தடை செய்தாக வேண்டும். காய்கறி உற்பத்திகளை லைசென்சு கொடுப்பது மூலம் முக்கால் அளவைக் குறைத்து மாமிசம் சாப்பிடாத ஜாதியான பார்ப்பனர், சைவர்களுக்கு மாத்திரம் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்யும்படி செய்யவேண்டும்.

## மாட்டிறைச்சி அதிகம் கிடைக்க வழி செய்க

ஆடு, கோழி, பன்றி முதலிய மாமிசம் சாப்பிடும் மக்களை மாட்டிறைச்சியும் சாப்பிடும்படிச் செய்து, அது எளிதாய்க் குறைந்த விலைக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். மேல்நாடுகளைப் போல் மாட்டுப்பண்ணைகளை வைத்துக்கொள்ளவேண்டும். பசு மாடுகளைப் பால் கறவைக்கு வைத்துக்கொள்ளவேண்டும். மேல்நாடுகளைப் போல் விவசாயத்துக்கு மாடுகளே தேவையில்லாமல் எந்திரங்களைப் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

## உணவுப் பக்குவ முறை

உணவுப் பக்குவ முறையும் - சுத்த சோம்பேறிகள், உடல் நலுங்காமல் ஊரார் உழைப்பில் உயிர்வாழும் சோம்பேறிகளால் திட்டப்படுத்தப்பட்ட முறையாதலால், நம் உணவு முறை நம் மக்களுக்குப் பெரிய பாரமாக இருக்கிறது. பகலில் சோறு, குழம்பு, ரசம், பொறியல்(ஒரு காய் ), மோர். காலையில் இட்லி அல்லது தோசை, உப்புமா, காபி அல்லது டீ. இரவிலும் இவையோ,இவற்றில் ஏதாவது ஒன்று எவ்வளவு வருமானம் குறைந்த சமுதாயமும் இவற்றுள் ஏதாவது ஒன்றைத்தான் குறைத்துக் கொள்வார்களே தவிர முறையை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். இவற்றிலும் வடநாட்டார் பெரிதும் சுருக்கி,

(1) சப்பாத்தி அல்லது பூரி.

(2) இதற்கு ஏதாவது காய்வகை அல்லது பருப்பு, பணக்காரர் இவற்றுடன் இனிப்புப் பண்டங்களைப் பயன்படுத்திக் கொள்வர்.

உலகில் உள்ள சுமார் 370 கோடி மக்களில் 15 கோடிமக்கள் தான் மாட்டு மாமிசம் சாப்பிட்டுப் பழகாதவர்களாக இருக்கக்கூடும்.

## உணவுப் பஞ்சம் போக்க வழி

விவசாயத் துறையில் இன்று நடைபெறும் வயல்பரப்பிலும் முயற்சியிலும் பாதி நேரத்தைக் குறைத்துக் கொண்டு அந்த நேரத்தில் ஆடு. மாடு, கோழி, பன்றி, மீன், வளர்ப்பில் கவனம் செலுத்தி நல்ல அளவுக்குப் பெருக்குவோமானால் - காபியையும் தடைப்படுத்தி விடுவோமானால் உணவுப் பஞ்சம் என்கின்ற சொல் அகராதியில் கூட இல்லாத அளவுக்கு ஒழித்துவிடலாம்.

காபி என்பதற்கு நாகரிகத்தினால் மனிதன் அடிமைப்பட்டு வாழ்க்கைச் செலவைப் பெருக்கிக்கொண்டான். அதுபோலவே அரிசிச் சாதமும் நாகரிகத்தில் பட்டுவிட்டதால் இதற்கு மனிதன் அடிமைப் பட்டு வாழ்க்கைச் செலவையும் பெருக்கிக்கொண்டு சத்துள்ள கேப்பை, கீரைகளையும் புறக்கணித்துவிட்டான். இன்று உழைப்பாளிகள் வேலை நேரமும் குறைந்துவிட்டதற்கும் வேலை செய்யும் நேரங்களிலும் அவர்கள் நாணயக் குறைவாக நடப்பதற்கும் இந்தச் சத்தற்ற உணவுமுறை தான் காரணம் என்று சொல்லுவேன்.



மக்கள் பிறப்பது என்பது இனிமேல் அருமையாய்ப் போய்விடும் ; அதுபோலவே சாவும் இனி குறைந்துவிடும். மனிதன் வெகுசுலபமாக இனி நூறாண்டு வாழமுடியும். யாரும் சராசரி இரண்டுக்கு மேல் பிள்ளை பெறமாட்டார்கள் - பெறவும் கூடாது. ஆண் - பெண் புணர்ச்சிக்கும் பிள்ளைக்கும் சம்பந்தமில்லாமல் போய் விடும். நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் சுதந்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியான, பொலிகாளைகள் போல தேர்ந்தெடுத்த மணிபோன்ற பொலிமக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைக்குள் செலுத்தி, நல்லகுழந்தைகள் பிறக்கச் செய்யும் விஞ்ஞான அறிவு வளர்ந்துவிடும்.

*( தந்தை பெரியார் அவர்கள் 30 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன இந்தக் கருத்து விஞ்ஞான ரீதியாக இன்றைக்குச் சாத்தியமாகி இருப்பது குறிப்பிடத்தக்கது)*

வேலை செய்கிற குதிரைகள் வேறு, குட்டி போடுகிற போடச் செய்கிற குதிரைகள் வேறு என்கிற மாதிரி, மனித சமுகத்தில் இருக்கும் பிள்ளைபெறும் தொல்லை, வளர்க்கும் தொல்லை அதற்குச் சொத்து சுகம் தேடும் தொல்லை ஒழிந்து போகும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. மனிதன் அறிவு பெற்றதற்குக் காரணம் சாமி விளையாட்டும் பிள்ளைகள் உண்டாக்கும் விவசாயப் பண்ணையும் தானா? மனித அறிவின் எல்லையைக் காணவேண்டாமா? செல்வம் தரித்திரம், சுகம்-கஷ்டம், கவலை , தொல்லை இவைகள் தானா மனிதனின் கதிமோட்சம்?

எனவே, மனிதன் அறிவின் எல்லையில், சுயேச்சையும் திருப்தியும் நிறைந்த வாழ்வில் மொய்க்க வேண்டுமானால் , பிள்ளைப் பேற்றை பற்றி அவன் அளவுக்குமீறி கருதிக் கொண்டிருக்கிற தப்பான எண்ணத்திலிருந்து விடுபட்டே தீரவேண்டியவனாவான்!

# நான் கூறும் மார்க்கங்கள்

நமக்குத் தோன்றும் அவசர சமாதான மார்க்கம் என்ன வென்றால் -முதலாவதாக, பிறவியால் கீழ்-மேல் உயர்வு-தாழ்வு கற்பிக்கும் ஜாதிமுறை என்பதை அடியோடு போக்கடிக்க வேண்டும்.

கோயில் முறை எடுக்கப்பட்டு பிரார்த்தனை இடங்களாக - உருவ சம்பந்தமே இல்லாத பொது மண்டபங்கள் இருக்கலாம்.

### குழந்தை - சம்போக விஷயத்தில் ஏற்படும் ஒரு நோய்!

ஒருவன் தன்னால் காப்பாற்றக்கூடியதற்கும் அதிகமாகப் பிள்ளைகள் பெற்றுக் கஷ்டப்பட்டு என்ன பயன் என்பது கவனிக்கத் தக்கதாகும். உலகம் விருத்தியாக வேண்டாமா என்ற சொல் சுத்த முட்டாள்தனமானது. சம்போக விஷயங்களில் கவலையற்றும், முரட்டுத்தனமாகவும், அளவுக்கு மீறியும் நடந்துகொள்வதால் மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைப் போலவேதான் குழந்தைகள் ஏற்படுவதும் என்பதே தவிர, அதற்கும் இதற்கும் சற்றும் வித்தியாசமே இல்லை. சம்போக உணர்ச்சி உள்ள உயிர்களில் மனிதனைத் தவிர, வேறு எந்த உயிர்க்கும், குழந்தை பெறுவதற்காக என்கிற ஆசையோடும் ஆவேசத்தோடும் சம்போக உணர்ச்சி தோன்றுவதே கிடையாது. மனிதன் பகுத்தறிவுக்காரன் என்கிற ஆணவத்தால், அவனுக்கு ஏற்படும் அனேக முட்டாள்தனமான செய்கைகளைப் போல், குழந்தை பெற வேண்டும் என்கின்ற முட்டாள் தனமும் ஏற்பட்டு, அது ஒரு ஆசையாகி, சொத்தாகி, "மோட்சத்திற்கு" உதவும் காரியமாகி கடைசியாய் வீண் துன்பமும்பட்டு மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதைத் தவிர, வேறு ஒரு பயனும் இல்லை.

### வளர்ச்சிக்குப் பிள்ளை ஒரு பெருந்தடை!

பிள்ளைகளைப் பெற்றுக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு தங்களுக்கே என்று பெண்கள் கருதுவதால், சுதந்திரமும் வீரமும் இன்றி அடிமையாகிறார்கள். பெண்கள் துன்பம் இப்படி இருக்க, பொதுவில் வேலை இல்லாத் துன்பத்தை நீக்கவும், மக்கள் கவலையும் தொல்லையும் இல்லாமல் இருக்கவும் பிள்ளைப் பேற்றைக் குறைப்பது என்பது தக்க வழியாகும். புருஷன் தனக்கு இஷ்டமான பெண்ணை மணந்து கொள்வதற்கும், பெண்சாதி ஒரு புருஷனைத் தவிர, வேறு எந்த புருஷனை எந்தக் காரணங்கொண்டும் மணந்து கொள்ள முடியாததற்கும் இக் குழந்தைகளைப் பெறுவதே பெருந்தடையாயிருக்கிறது. பிள்ளைகளைப் பெறுவதாலேயே பெண்கள் சுதந்திரம், மானம், அறிவு எல்லாவற்றையும் விட்டுவிட நேரிடுகின்றது. சிறிதளவு சுயேச்சையுள்ள பெண்ணாய் விளங்கு வதைவிட , பிள்ளைகளைப் பெறும் அடிமையான இயந்திரமாகவே இருக்க வேண்டியதாய் இருக்கின்றது.



### புரட்சி அவசியம்

எனவே உணவுத் துறையில் நம் நாட்டில் பெரிய மாறுதல் ஏற்படவேண்டும்.

அரிசிக்குப் பதிலாக வேறு ஏதாவது இராசாயனப் பொருளைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும். நாம் எந்திரம் ஓட்டுவதற்கு முதலில் நெருப்பைக் கொளுத்தி நீராவியில் இயங்க வைத்தோம். பிறகு மண்ணெண்ணை, குரூட் ஆயில், பெட்ரோல், மின்சாரம் என்று காலத்திற்கேற்றார் போல் மாற்றி ஓடச் செய்கிறோம். அதுபோலவே மனித எந்திரத்தையும் பெருந்திண்டி மூலம் ஓடச் செய்யாமல் மின்சாரம் போன்ற சக்தி வஸ்துவைக் கண்டு பிடித்து(சிறிய உணவை) அதைக் கொண்டே மனிதனை இயங்கும் படியும். உயிர் வாழும் படியும் செய்யவேண்டும். இது செய்ய நாளாகும் என்றாலும் இப்போது அவசரத்தில் ரொட்டியையும்,ஆடு, மாடு, பன்றி, மீன் முதலிய இறைச்சிகளையும் தேவையான அளவுக்கு குறைந்த செலவில் உற்பத்தி செய்து எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்வது அவசியமாகும். இதைக்கண்டு நமது நாட்டு மக்கள் என் மீது ஆத்திரப்படுவார்கள் அவர்களுக்கு நான் கூறும் பதில், மற்ற நாட்டுக்காரர்களையும் நம் மக்களையும் பாருங்கள் என்பது தான்.

## உடை-சாயல்-மாற்றம்

ஒரு நாட்டிற்குள் இருக்கும் பலவிதமான வேற்றுமைகளை ஒழித்து ஒரு சமூகமாக்க வேண்டுமானால் முதலில் சாயலுக்கும், பிரித்துக் காட்டுவதற்கும் ஆதாரமாயிருக்கும் உடையை ஒன்றுபடுத்த வேண்டியது முக்கியமானதாகும். இதை உணர்ந்துதான் வீரர் கமால்பாட்சா அவர்கள் எல்லோரும் ஒரே வித உடை அணிந்து ஒரு சாயலாகவே இருக்க வேண்டும் என்று உத்திரவிட்டார். அதன் மூலம் துருக்கி நாடு சிறியதாக இருந்தாலும் அது தன்னையும் ஒரு வல்லரசு என்று மதிக்கும்படி செய்து கொண்டது.

### மேல் நாட்டவரும் நாமும்!

சாயல், உடை, பழக்க, உணர்ச்சி ஆகியவைகளில் மேனாட்டார் போல் கட்டுப்படுகின்ற வழக்கமோ கவலையோ நம்மவர் களுக்குச் சிறிதும் கிடையாது. ஆதலினாலும், அவ்வித வித்தியாசங்களே இந்த நாட்டின் பெருமைக்கும், இயற்கை

வனப்பிற்கும் அணிகலனாய் இருப்பதாக மக்கள் கருதி வந்தாலும் இது இப்போது பிரஸ்தாபிக்கக் கூடாததாகக் கூட பலருக்குத் தோன்றலாம்.

நம் நாட்டிலே எப்பேர்பட்ட மாறுதலாயிருந்தாலும் அது எவ்வளவு சரியானதாகவும் தேவையானதாகவும் இருந்தாலும், பயனும் பொருளும் அற்ற பழைய வழக்கம் என்னும் பேய்க்கு. அதாவது மூடப்பயத்திற்கு ஆளாகி உடனே அதைக் குற்றம் சொல்லவும், உள் எண்ணம் கற்பிக்கவும், எதிர்ப்புப்பிரச்சாரம் செய்யவும் புறப்பட்டு விடுகிறார்கள். ஆதலால்தான் ஆயிரக் கணக்கான வருடங்களாக இந்நாட்டு மக்கள் மாத்திரம் வேற்றுமைப் பட்டு. பிறந்து, துவேஷங்கொண்டு அந்நியர்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள் . இதை ஒரு வழியில் போக்க முயற்சிக்க வேண்டுமென்று கருதி பல மாறுதல்களுடன் உடை மாறுதல்களைப் பற்றித் துணிந்து தெரிவிக்கிறேன்.

ஆண்களும் பெண்களும் ஒரே மாதிரியாக லுங்கி கட்ட வேண்டும் ஜிப்பா போடவேண்டும். என் மனைவி நாகம்மையே கூட என் கருத்துப்படி ஒன்றரை மாதம் வரை லுங்கி கட்டிக்கொண்டு வெட்கப்பட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போகவில்லை.

### உடைகளில் ஆண்-பெண் வித்தியாசம் கூடாது!

உடைகளில் ஆண்-பெண் வித்தியாசம் இருக்கக் கூடாது. சுலபத்தில் இது ஆணா, இது பெண்ணா என்று மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாத மாதிரியில் உடைகள் அணியவேண்டும். பெற்றோர்கள் தங்கள் பெண்களை பெண் என்று அழையாமல் ஆண் என்று அழைக்கவேண்டும் . பெயர்களும் ஆண்கள் பெயரையே இடவேண்டும்.

### பெண்களே! கூந்தலை கத்தரித்துக் கொள்ளுங்கள்!

பெண்கள் எல்லாம் ஆறடி ஏழடி என்று கூந்தலை வளர்த்துக் கொள்வது அநாகரிகம்; தேவையற்ற தொல்லையுமாகும். ஆண்களைப் போலவே பெண்கள் கிராப் வைத்துக்கொள்ளவேண்டும். ஆண்களைப் போலவே கிராப் வெட்டிக் கொள்ளும் பெண்களுக்கு



இல்லாவிட்டாலும் பிறகு வந்தே தீரும். நான் சொன்னது நடக்காமல் இருக்கவில்லையே! எனவே திருமணத்துறையில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும் சம எண்ணிக்கையுடையதும் சம உரிமைகளைப் பெற வேண்டியதுமான ஜீவன்களை இப்படிக் கொடுமைப் படுத்துவது மிகவும் அக்கிரமமாகும்.

பெற்றோர்கள் தங்கள் பெண்களை 22 வயது வரைக்கும் நன்றாகப் படிக்க வைக்கவேண்டும். பிறகு ஒரு தொழிலும் கிடைக்கச் செய்த பிறகே வாழ்க்கைத் துணையைப் பற்றி நினைக்க வேண்டும். அதுவும் அந்தப் பெண்ணாகப் பார்த்து ஒரு ஆணைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டுமே ஒழிய பெற்றோர்கள் குறுக்கிடக் கூடாது!

## பிள்ளைப்பேறு

பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்கும் கர்ப்பம் விரோதியாய் இருப்பதால், சாதாரணமாய் பெண்கள் பிள்ளை பெறுவதை அடியோடு நிறுத்திவிடவேண்டும் என்கிறேன். பெண்களுக்கு மட்டுமல்ல; பல பிள்ளைகளைப் பெறுகிற காரணத்தால், ஆண்களும் கூட சுயேச்சையுடனும் விடுதலையுடனும் இருக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகளைப் பெற்றதோடு அல்லாமல் அவற்றை வளர்க்க ஒழுக்கயீனமாய் நடந்து கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். ஒழுக்கக் கேட்டிற்கு அதிகப் பிள்ளைகளைப் பெறுவதும் காரணமாகும்.

### சுயேச்சைக்கு முட்டுக்கட்டை

உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டு, தன்தன் ஜீவனத்திற்கே சுதந்திரத்தை விற்று அடிமையாக வேண்டிய நிலையில் இருக்கும் பொழுது, பிள்ளைகளையும், குட்டிகளையும் காப்பாற்ற வேண்டிய அவசியமும் தலைமீது விழுமானால், அந்த இடத்தில் சுயேச்சை எப்படி இருக்க முடியும்?

அன்றியும், பெண்கள் வியாதியஸ்தர்கள் ஆவதற்கும் சீக்கிரம் கிழப்பருவம் ஆவதற்கும் இந்தக் கர்ப்பம் என்பதே மூலகாரண மாகிறது. தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரச்சாரத்தைவிட இந்தக் கர்ப்பத்தடை பிரச்சாரம் மிகவும் முக்கியமானது என்பது எனது அபிப்பிராயம்.

நலத்திற்கு கேடோ இல்லாமலும், ஒத்த காதல், ஒத்த இன்பம், ஒன்றுபட்ட உள்ளம் கொண்ட கலவியால் சமுதாயத்திற்கோ, தனிப்பட்ட நபருக்கோ எவ்விதக் கெடுதியும் ஏற்பட்டுவிடாது . அதனால் விபச்சாரம் என்பதற்கோ இடமில்லாமல் போகும்!

## திருமணம் ஒரு அடிமை முறை

திருமண முறையானது காட்டுமிராண்டிக்காலத்தில் அதாவது 3000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டதாகும். அதை இன்றைக்கும் மனிதன் எதற்காக கடைப்பிடிக்க வேண்டும்? ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணை அடிமைப்படுத்தவே திருமணம் நடைபெறுகிறது. கோயிலுக்கு எப்படி மிருகங்களைப் பலி கொடுக்கிறார்களோ அது போலவே பெண்ணைப் பலி கொடுக்கிற விழாதானே திருமணம்!

இந்த நாட்டின் மக்கள் தொகையில் சரிபாதியான பெண்கள் இனத்தை எதற்காக இப்படிக் கொடுமைப் படுத்தவேண்டும்? இந்தத் திருமண முறை பெரிதும் சுயநலத்துக்காகவே ஒழிய, பொதுநலத்துக்கு அல்லவே? புருஷனுடைய வேலை பெண்டாட்டியைப் பாதுகாப்பதும் பெண்டாட்டி புருஷனைப் பாதுகாப்பதும், இருவருக்கும் குட்டிகள் ஏற்பட்டால், அவற்றை இரண்டு பேருமே சேர்த்துக் காப்பாற்றவும் தான் பயன்படுகிறதே ஒழிய சமுதாயத்துக்குப் பயன்படுவதே இல்லை.

அடுத்த வீடு நெருப்புப் பிடித்தாலும் அதுபற்றிக் கவலைப் படமாட்டான். ஒரு வாளி தண்ணீர் கொடுப்பான்; ஆனால், அது அவன் வீட்டுக்குத் தீ பரவாது இருக்கட்டும் என்பதற்காகவேயாகும். ஆண்களும், பெண்களும் இத்தகைய தொல்லையில் மாட்டிக் கொள்ளாமல் , படித்து ஆராய்ந்து விஞ்ஞான அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடித்து மேன்மை அடைய வேண்டாமா? அதனை அடுத்து, புருஷன் பெண்டாட்டியாகி , தனிக்குடித்தனம், தனிச் சமையல் என்று ஆக்கிக்கொண்டு , பொதுநல உணர்ச்சி அற்றவர் களாகவே ஆகிவிடுகின்றார்கள்.

உலகம் வளர்ச்சி அடையவேண்டுமானால் , உலகம் தொல்லையில்லாமல் சுபிட்சம் அடையவேண்டுமானால் திருமணம் என்பதைக் கிரிமினல் குற்றமாக்கிவிட வேண்டும். இன்று



500 ரூபாய் பணம் கூட பரிசாகத் தருகிறேன் என்று சொல்லி யிருக்கிறேன். நடை-உடை சாயல்களில் ஆண்களைப் போலவே பெண்களும் மாற்றம் பெறுவது அவசியத்திலும் அவசியமாகும்- பெண்ணடிமை ஒழிவதற்கு ஒரு நல்ல வழியுமாகும்.

### ஆடம்பரம்-அலங்காரம் கூடாது!

ஒரே மாதிரி உடை என்று சொல்லுகிறபோது அனாவசியமான ஆடம்பரத்தை ஒழிக்கவேண்டும் ஆண்களைப் போலவே தாங்களும் ஆகவேண்டுமே என்றில்லாமல், வீண் அலங்காரம் செய்து கொண்டு திரிவது பெண்கள் சமுதாயத்தின் கீழ்ப்போக்குக்குத்தான் பயன்படும் என்று வருந்துகிறேன்.

நம் நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தை வேகமாகத் தடுத்து வருவது அவர்களது சீலை, நகை , துணி, அலங்கார வேஷங்கள் தான் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

டீசன்சி ( Decency )-சுத்தம்-கண்ணுக்கு வெறுப்பில்லாத ரம்மி யம் வேண்டாம் என்று சொல்லுவதாக யாரும் கருதக்கூடாது அது அவசியம் வேண்டும். ஆனால் அது அதிக பணம்கொண்ட, மக்கள் கவனத்தை ஈர்க்கத்தக்க பேஷன் ; அலங்காரத்தால் அல்ல என்றும், சாதாரண குறைந்த தன்மையில் முடியும் என்றும் உணரவேண்டும்.

## பொது சமையற்கூடங்கள்

ஹோட்டல் என்பது உணவு விடுதிக்கும் சொல்லலாம் - தங்கும் இடத்திற்கும் சொல்லலாம். ஜனங்கள் ஒவ்வொரு வரும் தனி வீடு கட்டிக் கொள்வதும், வீட்டுக்குவீடு சமையலறை இருப்பதும் அனாவசியமான காரியமாகும்

### மேல்நாட்டு நிலைமை

மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமானால் , அனாவசியமான தொல்லைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். மேல்நாட்டில் எல்லாம் பார்த்திருக்கிறேன். பெரும்பான்மையானவர்கள் உணவு விடுதி அறைகளிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்கிறார்கள். சாப்பாட்டுக்கு ரெஸ்டாரண்டுக்கு ஆர்டர் கொடுத்து வரவழைத்து விடுவார்கள். அங்கு இருக்கும் ரெஸ்டாரண்டுகளும்

ரெஸ்ட்டாரண்டுகளும் ஏறத்தாழ ஆயிரம் பேர்வரை சமாளிக்கும் சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

### *கணவன் மனைவி வேலைக்குப் போகலாம்!*
### *உணவுவிடுதியில் வேண்டியதை உண்ணலாம்!*

கணவனும் மனைவியும் வேலைக்குப் போகலாம் சாப்பாட்டு நேரத்திற்கும், தங்குவதற்கும் , உணவு விடுதி அறைக்கு வந்தால் போதும். இப்படியாக, அனாவசியமான தொல்லைகளை எல்லாம் குறைத்துக் கொள்கிறார்கள். சாமான்கள் வாங்குவது, சேகரிப்பது, அவற்றைப்பாதுகாப்பது என்ற கவலையே அவர்களுக்குக் கிடையாது.

இங்கு என்னடா என்றால், அனாவசியமாக இரண்டு பேர் வாழ்வதற்காக இலட்சக்கணக்கில் ரூபாய் போட்டு வீடு கட்டுகிறார்கள். இது தேவை இல்லாத ஒன்றாகும். மேனாடுகள் போல் இங்கும் தங்கும் உணவு விடுதிகள் ஏற்படவேண்டும் அதைப் போல் நடத்த முன்வருகிறவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவி செய்துதர முன்வர வேண்டும்.

### *ருசியாவில் 26 ஆயிரம்பேர் உண்ணும்*
### *பொது சமையற்கூடம்!*

உணவு விடுதிக்காரர்களும்வெறும் லாபநோக்கத்தோடு வியாபாரம் செய்யாமல், பொதுநல நோக்கோடு நடத்த வேண்டும். நான் ருசியாவிற்குச் சென்றபொழுது ஒரு பொது சமையல் கூடத்தை (Common kitchen) என்னிடம் காட்டினார்கள். அது மட்டுமல்ல ஏறத்தாழ 26 ஆயிரம் பேர் உணவு அருந்துகிறார்கள். அதை மேற் பார்வையிட டாக்டர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். தேவையான எல்லா வகை உணவையும் அங்கே தயாரிக்கிறார்கள். இதைப் போன்ற நிலை நமது நாட்டிலும் உருவாக வேண்டும்.

### *ஆளுக்கு ஆள் வீடு தேவையேஇல்லை!*

ஆளுக்கு ஆள் வீடு தேவை என்ற நிலைமையும் , வீட்டுக்கு வீடு சமையலறை என்கின்ற நிலைமையும் ஒழிந்து தங்கும் உணவு விடுதிகள் ஏற்பட்டால்தான் வீண் அனாவசியமான தொல்லைகளை நாம் குறைத்துக்கொள்ள முடியும். இந்த விஷயத்தில் அரசாங்கம் போதிய கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கமே அது போன்ற பொது சமையற்கூடங்களை நடத்த முன்வரவேண்டும். இந்த



ருசியா போன்ற சொத்துரிமையற்ற நாடுகளில் இது போன்ற கட்டுப்பாடுகள் தேவை இல்லாமல் போய் விட்டது. ஏதோ இயற்கை உணர்ச்சிக்காக ஓய்வு நேரங்களில் சாந்தி ஏற்டுவதற்காக ஒரு வாழ்க்கைத் துணை இருக்க வேண்டும் ; அவர்கள் சிநேகிதர்கள் மாதிரி என்றைக்கும் இருப்பார்களே தவிர, அங்கு கலியாண முறையே கிடையாது இதுதான் அங்குள்ள ஆண்-பெண் உறவுத் தன்மை.

இருவரும் ஆபீசுக்குப் போகுமுன் முத்தம் கொடுத்து விட்டுப்போகின்றனர். திரும்பி வந்து பார்த்தால், டேபிளில் ஒரு கார்டு இருக்கும் 'இதுவரைக்கும் நாம் இருவரும் இஷ்டப்பட்டுக் கூடி சந்தோஷமாக வாழ்ந்தோம்; இனி இஷ்டமில்லை ; பிரிந்துகொள்வோம்! ' என்று இருவரில் யாராவது ஒருவர் எழுதி வைத்து இருப்பார்கள். ஒரு தகராறும் இல்லாமல் பிரிந்து கொள் வார்கள். அங்கு ஒருவன் மனைவியை இன்னொருவன் அனுபவித் தான் என்ற பேச்சு வராது; அனுபவிக்கப் பலாத்காரம் பண்ணினான் என்றால்தான் வழக்கு! எனவே, இது போன்ற ஆண்-பெண் உறவு முறையே மனிதனுடைய சுய உரிமைக்கும், மனத்திருப்திக்கும், மனித வளர்ச்சிக்கும் ஏற்ற முறையாகும்.

### *விபச்சாரம் இருக்காது*

இதுபோன்ற அமைப்பிலே விபச்சாரம் என்பது இருக்க நியாயமில்லை. ஏனெனில், பணத்துக்காகவும் பண்டத்துக்காகவும் விபச்சாரம் என்பது அடியோடு மறைந்து போகும். மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆளமுடியாது ஒருவர் தயவைக் கோரி ஒருவர் இணங்கிவிட முடியாது, ஒருவரை ஒருவர் அதாவது, ஆணும் பெண்ணும் மனப்பூர்வமான சம விருப்பமின்றிக் காதல் அனுபவிக்கமாட்டார்கள் கலவி விஷயத்தில் யாவருக்கும் தேர்ந்த அறிவும் கல்வியும் ஏற்படும் ஆனதால், மனமொத்த உண்மைக் காதல் வாழ்க்கை என்பதைத் தவிர, புதுமைக்காக, மாறுதலுக்காக அடிக்கடி மாறும் தன்மை சுலபத்தில் ஏற்பட்டுவிடாது அன்றியும் உடல் நலம் பற்றிய அறிவும் கவலையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் இருக்கும் விருப்பமில்லாத இடத்தில், சம்மதமில்லாத இடத்தில் இச்சை வைப்பது தனது சுயமரியாதைக் குறைவு என்றே ஆண் பெண் இருபாலாரும் கருதுவார்கள்.பெண் அடிமையோ, ஆண் ஆதிக்கமோ இல்லாமலும், பலாத்காரமோ, வற்புறுத்தலோ, உடல்

ஒரு புருஷன் ஒரே மனைவியுடனும் ஒருமனைவி ஒரேபுருஷனுடனும் மாத்திரமே இருக்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

இதன் பலாபலன் எப்படி இருந்தாலும், இந்தப்படி சொல்கின்றவர்களை எல்லாம் உலகனுபவம், மக்கள் தன்மையின் அனுபவ ஞானம் இல்லாதவர்கள் என்றும், இயற்கை தன்மையையும் உண்மையையும் அறியாதவர்கள் என்றும், அல்லது உண்மை அறிந்து வேறு ஏதோ ஒரு காரியத்திற்காக வேண்டி, வேண்டுமென்றே மறைக்கின்றவர்கள் என்றுந்தான் கருதவேண்டியிருக்கிறது.

காதல் கொள்ளும்பொழுது காதலர்கள் நிலைமை, மனப்பான்மை, பக்குவம், இலட்சியம் ஆகியவைகள் ஒரு மாதிரியாக இருக்கலாம். பிறகு கொஞ்சகாலம் கழிந்த பின் இயற்கையாகவே பக்குவம், நிலைமை, லட்சியம், மாறலாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களிலும் காதலுக்காக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டு சதா அதிருப்தியில்-துன்பத்தில் அழுந்தவேண்டியது அவசியமே இல்லாத ஒன்றாகும்.

வெளிப்படையாய், தைரியமாய் மனித இயற்கையையும் , சுதந்திரத்தையும், சுபாவத்தையும், அனுபவத்தையும் கொண்டு பேசுவதானால், ஒரு ஆண் ஒரு பெண்ணைத் தேடிக்கொள்வதும், ஒரு பெண் ஒரு ஆணைத் தேடிக்கொள்வதும், ஒரு மனிதன் தனக்கு இஷ்டமான ஒரு ஓட்டலில் சாப்பிடுவது போலவும், தனக்குப் பிடித்த ஒரு பலகாரக் கடையில் பலகாரம் வாங்குவது போலவும் அவனுடைய தனி இஷ்டத்தையும் மனோபாவத்தையும், திருப்தியையும் மாத்திரமே சேர்ந்ததாகும்.

சொத்துரிமை இல்லாத ருசியா போன்ற நாடுகளில் ஆண்களும்பெண்களும் கணவன் மனைவி என்று இல்லாமல் நண்பர்கள், காதலர்களாகவே இருந்து வருகின்றனர். திருமணம் என்ற அமைப்பு முறையில் அமைப்பும், ஏற்பாடும் இல்லாமலே வாழ்கிறார்கள். இதற்குக் கட்டுப்பாடற்ற காதல்(Free love) என்று பெயர். சுதந்திரமான ஆண்-பெண் உறவு வாழ்க்கை அங்கே இருக்கிறது. சொத்து வாரிசு உரிமை இருக்கிற காரணத்தால் தான், நம்முடைய நாட்டில் கட்டுப்பாடுள்ள குடும்பமுறை ஏற்படுத்த வேண்டியதாயிற்று.



உணவுவிடுதிகளின் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் சமையலறை இல்லாமல் செய்யவேண்டும் இதன் மூலம் குடும்பத் தொல்லைகளைக் குறைக்க முயற்சிக்கவேண்டும்.

## கூட்டு-உறவு வாழ்க்கை

என்னைப் பொறுத்தவரையில் என்னைப்பற்றி யார் என்ன நினைத்துக் கொண்டிருந்த போதிலும், எனது முடிவான லட்சியம் அதாவது, எனது எண்ணம் ஈடேறுமானால் , அது உச்சஸ்தானம்பெற்ற உயரிய கூட்டுவாழ்க்கை முறையாகத்தான் இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

கூட்டுறவு என்கிற கொள்கையானது, உயரிய சரியான முறையில் நம்முடைய நாட்டில் ஏற்பட்டுவிடுமேயானால்; ஜன சமூகமானது கவலையற்று- சஞ்சலமற்று நாளைக்கு என்ன செய்வது என்று ஏங்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையற்று- நிம்மதியாக- சாந்தியாக -திருப்தியுடன்-குதுாகலமாக வாழ வழி ஏற்பட்டுவிடும்.

### இலாப மனப்பான்மை

நம்முடைய நாட்டில் ஏதாவது ஒரு சங்கம் ஏற்பட்டால் அதைப்பற்றி நம்முடைய மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், அதில் தங்களுக்கு எவ்வளவு துாரம் லாபம் இருக்கிறது என்றும், அதைத் தங்கள் பெருமைக்கும் வாழ்வுக்கும் (சுயநலத்திற்கு) எவ்வளவு துாரம் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாமென்றும்தான் கருதிக்கொண்டு, அதில் சம்பந்தம் வைத்துக்கொள்ளுகிறார்களே ஒழிய, அதனால் உலக நன்மைக்கு, ஜன சமூக மேம்பாட்டிற்குப் பாடுபட வேண்டுமென்பதைப் பற்றிய பொறுப்பையும் அறவே விட்டுவிடுகின்றனர்.

### குறைவற்ற வாழ்வுக்கு ஒரு வழி!

இங்கு ஒரு மனிதனுக்கு ஒரு வண்டி இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதில் அவன் எப்பொழுதும் போய்க் கொண்டிருக்கிறானா? ஆனால், அதனை இழுக்கும் பிராணிக்குத் தினம் 10 மணி நேரத்திற்கும் வீணில் தீனி போட்டு, 3 மணி நேரத்திற்கும் குறைவாகவே வேலை வாங்குகிறான். 3 மணி நேரம் மத்திரம்

அனுபவிப்பதனால் பாக்கி 7 மணி நேரம் கூலியும் செலவும் முதலும் வீணாகின்றன. இப்படியே தான் ஒவ்வொரு விஷயத்திலும் தனிப் பட்டவர்கள் தன்மையால் நஷ்டங்கள் உண்டாகின்றன. அனேகமாய் நம்முடைய நாட்டில் தேசச் செழிப்பும் அனுபவப் பொருள் உற்பத்தியும் ஒன்றுக்கு எட்டாக விளங்குகிறதா இல்லையா? அப்படி இருந்தும் மக்களின் கஷ்டத்திற்குக் காரணம் என்ன? தனித்தனி, அவனவன் சுயநலம் என்னும் உணர்ச்சியே இதற்குக் காரணம் . எனவே, இந்த உணர்ச்சி ஒழியவேண்டுமா? வேண்டாமா? மனிதனுக்குக் கவலை யற்றும் குறைவற்றும் வாழும் வாழ்வு தான் சிறந்தது. அதற்குக் கூட்டுறவு முறையேதான் பெரிதும் தேவையானது.

<u>ருசியாவைப் பார்!</u>

மனித சமூக நல்வாழ்க்கைக்குக் கூட்டுறவு என்றைக்காவது தலைதூக்கித்தான் ஆகவேண்டும்; இதற்காகப் பொதுஉடைமை வேண்டுமென்பதில்லை பொது உடைமைப் பேச்சே வேண்டியதில்லை. ஆனால் கூட்டுறவு தன்மையைக் கைக்கொண்டால் போதும். வட்டி விஷயத்திலும் இங்கு பாங்குகளில் ஏராளமான ரூபாய் தூங்குகிறது. ஆனால் குடியானவன் விவசாயச் செலவுக்குப் பணம் வேண்டுமானால், தனிப்பட்ட முதலாளியிடம் மாதம் 1 க்கு ரூ 10க்கு கால் ரூபாய் வட்டி வீதம் கடன் வாங்குவதென்றால் என்ன கொடுமை! ரஷ்யாவில் தனிப்பட்ட மனிதர் எவரும் லேவாதேவி செய்யக்கூடாது! ஒருவனுக்கு மற்றொருவன் 5 ரூபாய் கடன் கொடுத்தால் அது அங்கு திருட்டு ஆகிவிடுகிறது. ஆபத்தில் உதவ வேண்டாமா என்றால் , கஷ்டத்துக்காக வேண்டும் என்றாலும் எப்படி ஆபத்தும், கஷ்டமும் ஏற்படும் என்பது தான் அங்கு கேட்கப்படும் கேள்வியாகும்.

<u>தனித்தனி என்னும் தத்துவத்தை எறிந்துவிட்டு கூட்டுறவு ரத்தத்தைப் புகுத்துங்கள்!</u>

ஜனசமூகம் கவலையற்று வாழ, ஒழுங்கான முறை கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிடவேண்டும். பலருடைய நன்மைக்கும் என்று கருதி வாழ்வில் இறங்கவேண்டும். இவற்றைச் சர்க்கார் செய்யவேண்டியதா? பொது ஜனங்கள் செய்ய வேண்டியதா என்பது, ஆஸ்திகர்கள் விதி பெரிதா? மதி பெரிதா



அரசாங்கத்திற்குச் சொந்தமோ- அதுபோலவே குழந்தைகள் பிறந்தபின் அவைகளையும் அரசாங்கத்திற்கு சொந்தச் சொத்தாகவே கருதி, அரசாங்கம் அவர்களை எடுத்துக் கொள்ளவேண்டும். பிள்ளைகளைக் காக்க வேண்டுமே - அவர்களுக்குப் படிப்பு கொடுக்கவேண்டுமே- அதற்குப்பின் வேலை தேடித் தரவேண்டுமே என்ற கவலை எல்லாம் பெற்றோர்களுக்கு அறவே கூடாது-அவற்றை எல்லாம் அரசாங்கமே பார்த்துக்கொள்ளவேண்டும்.

## <u>குடும்பம்; ஆண்-பெண்- ஒப்பந்தம்</u>

வயதுவந்த ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பித்தமது கூட்டுவாழ்க்கையைத் துவக்கிக்கொள்ள ஆசை கொண்டு அதற்காக ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்- அதற்குப் பெயரே வாழ்க்கை ஒப்பந்தம்.

வியாபாரம் தொடங்கிய பிறகு ஒப்பந்தம் செய்து கொள்வது பெரும்பாலும் கூட்டாளிகளிடையே அதிருப்தி ஏற்படக் காரணமாய் இருப்பதால்; இவர்கள் முன் கூட்டியே ஒப்பந்தத்தைச் செய்து கொள் கிறார்கள். கூடிச் செயலாற்றுதல், கூடி வியாபாரம் செய்தல், கூடிப் பண்ணயம் வைத்தல் ஆகியவற்றிற்குக் கூட்டாளிகள் முன்னாடியே தமக்குள் ஒரு திட்டம் ஏற்படுத்திக்கொள்வது இயற்கையேயாகும்: அறிவுக்கும் பொருந்தியதே ஆகும்; மிகவும் அவசியமாகும். அதுபோலவேதான் வாழ்க்கை நடத்துவதும் வியாபாரம் நடத்துவது போன்ற ஒரு செயல்தான் வியாபாரத்திற்கு முதலும் உழைப்பும் எப்படித் தேவையோ அதேபோன்று வாழ்க்கைக்கு ஒரு ஆணும் பெண்ணும் அவர்களது இரண்டறக்கலந்த நட்புறவும் தேவையாய் இருக்கிறது. இந்த வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு அறிவு, அன்புப் பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களே முக்கியமானதாகும். இவற்றில் முரண்பாடு ஏற்பட்டுவிடுமாயின். அந்தத் தருணமே- இவர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தமே முறிந்துவிட்டதாகவே அர்த்தம்.

ஒரு தடவை ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கணவன் மனைவி யாகிவிட்டால் ஆனது ஆனது தான். அதில் எந்தவித மாற்றமும் இருக்கவே கூடாது. அந்தப்படி மீறி அந்தப் பெண்ணுக்கோ,ஆணுக்கோ வேறொருவரிடம் காதல் ஏற்பட்டுவிட்டால், அது காதலாயிருக்க முடியாது. அதை விபரச்சாரம் என்று தான் சொல்ல வேண்டுமே ஒழிய, அது ஒருக்காலும் காதலாகாது என்றும் கற்பித்து,

# வாரிசுரிமை

இயற்கை இன்பத்துக்காக ஒரு பெண்ணுடன் கலவி செய்வது என்பது போய், தனக்கு ஒரு வாரிசு உண்டாக்கிக் கொள்வதற்காக ஒருத்தியோடு கூடவேண்டியது அவசியம் என்கிற நிலை ஏற்பட வேண்டியதாயிற்று. மனிதன் சொத்து வைத்துக் கொள்ள உரிமை இருக்கும் காரணத்தால்தான் பாடுபட்டு சிறிது சிறிதாகச் சேமித்து வைத்த பொருள்தான் இறந்த பிறகு யாருக்குச் சேர்வது என்ற கவலை ஏற்படுவதும், அது தன் வாரிசுக்கே-அதுவும் தனக்குப்பிறந்த பிள்ளைக்கே கிடைக்கவேண்டும் என்று நினைப்பதும் இயற்கையின் பாற்பட்ட ஆசையாகிவிட்டது.

வைதீகத்திற்காகப் பிள்ளை!

சொத்துக்காக ஒரு பிள்ளை பெறவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்ட பிறகு, கடவுளையும் நரகத்தையும் காட்டி, பணக்காரன் பொருளைப் பிற ஏழை மக்கள் அபகரிக்காமல் இருக்கப் பார்த்துக் கொள்ளும் பார்ப்பனர்கள் அப்பணத்தில் தானும் ஒரு பங்கு அடைவது அவசியம் என்று கருதி, பணத்திற்காக வாரிசு இருப்பது அவசியம் என்பது ஒருபுறமிருந்தாலும் ஒருவன், தான் இறந்த பிறகு தன் பேரைச்சொல்லித் தனக்காகக் கருமம் செய்ய பிள்ளைகளைப் பெற்றுவிட்டுச் செல்வது அவசியமென்றும், பிள்ளைப்பேறு இல்லாத வர்களால் மோட்ச லோகத்திற்குச் செல்ல இயலாது என்றும் கூறி, பிள்ளைப்பேற்றை அவசியமாக்கிவிட்டனர். லவுகீகத்திற்காக, சொத்துரிமைக்காக ஒருபிள்ளை பெறுவது அவசியமாக்கப் பட்டதைவிட-வைதிகத்திற்காக, தனக்கென்று பார்ப்பானிடம் அரிசி, பருப்பு அழ ஒரு பிள்ளை பெற வேண்டிய அவசியம் அதிகமாக வற்புறுத்தப்பட்டுவிட்டது.

பரிகாரம் என்ன?

சொத்தெல்லாம் (பொதுவழி) சர்க்காருடையது என்று ஆக்கப்பட்டு விட்டால் பிள்ளைகுட்டி வேண்டும் என்ற ஆசையும், அவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையும் மனிதனுக்கு வரவே வராது!

தனி உடைமை ஒழிந்து விட்டால் வாரிசுரிமை என்கின்ற பிரச்சினைக்கே இடமில்லை. புதையல் எடுக்கும் பொருள் எப்படி



என்று தர்க்கிப்பதை ஒத்ததாகும். இவ்விவகாரங்களில் வலுத்தவன்- வாய்ப் பேச்சுக்காரன் தான் ஜெயமடைவான். சர்க்கார்தான் ஜனங்கள்; ஜனங்கள் தாம் சர்க்கார் என்பதை உணருங்கள். நமது சரீரத்தில் கஷ்டம் ஏற்பட்டால் நமக்கென்னவென்று இருப்போமா? அது போல நமது பொதுஉணர்ச்சிகள் இருக்கவேண்டும். சிப்பியானது திறந்தி ருக்கும்பொழுது மழைநீர் விழும்போது தான் முத்தாகிறது. அதுபோல் தான் நமது உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி, சரிபடுத்தி வைத்துக் கொண்டு தயாராகவே இருக்கவேண்டும். அப்பொழுது கண்டிப்பாக பலன் ஏற்பட்டுவிடும். நம்முடைய அபிப்பிராயம் தான் ஜனசமூக அபிப்பிராயம் என்று தன்னம்பிக்கையுடன் நாம் வேலை செய்ய வேண்டும். நமது உடலில் தனித்தனி தத்துவரத்தத்தை எடுத்துவிட்டு கூட்டுறவுத் தன்மை என்ற ரத்தத்தைப் பாய்ச்சுதல் செய்யவேண்டும்.

# சொத்துரிமை

இன்றைக்கு விவகாரத்தில் முக்கியமாக உள்ளது சொத்துரிமை பிரச்சினைதான். இது சம்பந்தமாக வம்பு சண்டைகள், கொலை முதலியன நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

மனிதனுக்கு உணவுப் பண்டம் பற்றவில்லையானாலும் சற்றுக் குறைவாக இருப்பதனாலேயும் குறைகூற மாட்டான். ஒருவனுக்கு அதிகம் ; இன்னொருவனுக்குச் சும்மா ஒன்றுமில்லை என்றிருப்பதே குறைபாடுகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் காரணம்.

பேத நிலையே தொல்லைக்குக் காரணம்

பணக்காரன் மட்டும் கவலையற்றவனாக இருக்கின்றானா? இல்லை. தான் சம்பாதித்த பணத்தை அரசாங்கம் கண்டுகொள்ளாது இருக்க வேண்டும் என்று எவ்வளவோ புரட்டுப் பித்தலாட்டங்களை எல்லாம் பண்ணுகிறான். லட்ச ரூபாய் உடையவனாக இருந்தாலும் இரண்டு லட்சக்காரனைக் கண்டு தானும் அதுபோல் ஆகவேண்டும் என்று கவலைப்படுகிறான். தமது அந்தஸ்துக்கு ஏற்ப பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும்; சொத்து சேர்க்கவேண்டும் ; படிப்பு, உத்தியோகம், அப்புறம் பிரமோஷன் இவைகளுக்குப் பாடு படக்கூடியவனாக சதா கவலையே உடையவனாக இருக்கிறான். ஏழைகள், தொழிலாளிகள் பணக்காரனைப் பார்த்து, முதலாளியைப் பார்த்து மனம் புழுங்குகிறார்கள். எனவே கவலை பேதமற்ற நிலை ஏற்பட வேண்டுமானால் யாவரும் ஒரு நிலையில் இருக்கத்தக்க

சமதர்ம நிலை ஏற்பட்டால் தான் முடியும். இந்த சமதர்ம நிலை உருவாவதற்கு முதலில் இந்த சொத்துரிமையை ஒழித்தாக வேண்டும். உடைமைகள் எல்லாம் பொதுவாக ஆக்கப்படவேண்டும்; அதாவது பொதுவுடைமை பூக்கவேண்டும் . சொத்துக்கள் எல்லாம் அரசாங்கச் சொத்துக்களாக வேண்டும்.

மனிதனுடைய கவலைக்கும் குறைபாட்டிற்கும் பரிகாரமாக-முடிந்த முடிவாக இருப்பது இந்தப் பொது உடைமைத் தத்துவம் தான்.

<u>பொதுவுடைமையே சிறந்த பரிகாரம் !</u>

மோட்சம், முக்தி என்ற வார்த்தைகளுக்கு ‘துக்கநாசம் ‘சுகப்பிராப்தி’ என்பது பொருள். இந்தத் துக்க நிவர்த்திக்கும், குறை பாடுகள் ஒழிப்பிற்கும் பரிகாரம் பொதுவுடைமைதான் ஆகும்.

குறைபாடுகள் இரு விதங்களில் உண்டு. போதவில்லை என்பது ஒன்று - அதாவது, கால்படி அரிசி தேவையானால் அதற்கும் குறைவாகக் கிடைக்கிறதே என்பது. இரண்டாவது போதுமான அளவுக்கு மேல் வேண்டும் என்று ஆசைப்படுவது. உதாரணமாக ஒரு அறையில் வசிப்பவன் இரண்டு அறைகள் இருந்தால் நன்றா யிருக்கும் என்று ஆசைப்படுவது இப்படி ஆசையினால் ஏற்படும் குறையும். தேவையினால் ஏற்படும் குறையும் பொதுவுடைமை யினால் தீர்ந்துவிடும்.

இருக்கின்ற உணவுப் பொருளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பொழுது எல்லோருக்கும் ஒரேவிதமாக உணவுப்பொருள் கிட்டுவதால், தமக்குக் குறைவு என்ற எண்ணம் ஏற்படாது; எல்லோருக்கும் ஒரு அளவு தான் என்று எண்ணி சமாதானம் அடைந்துவிடுவான். இதனாலே போட்டி, பொறாமை ஏற்படுவது இருக்காது. கவலை ஒழிந்து எல்லோரும் மன நிறைவோடு வாழச் செய்யும்.

<u>தனி உடைமை ஒழிந்தால் கடவுள் ஒழியும்</u>

மேலும் தனியுடைமை ஒழிகிற ஒரு பொதுவுடைமை நாட்டில் கடவுளுக்கோ, மதத்துக்கோ, சாஸ்திரத்துக்கோ வேலை கிடையவே கிடையாது-இங்கு அறிவுதான் பிரதானம். அங்கு உயர்ந்தவன் -தாழ்ந்தவன், உயர்ந்த உத்தியோகஸ்தன் தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்கின்ற நிலையும் இல்லை ; எல்லோரும் சமமானமானவர்கள்;



எல்லோருக்கும் சம்பளம்(வாழ்க்கை வசதி)ஒன்றுதான்-வேலை தான் வேறு , வேறு, அங்கு பெரிய வேலையை ஒத்துக்கொண்டால் பொறுப்புகள் அதிகம் என்று கருதுவான்.

<u>பொது உடைமையா? பொது உரிமையா?</u>

பொதுவுடைமை வேறு; பொதுஉரிமை வேறு. பொது வுடைமை என்பது சமபங்கு என்பதாகும்; பொது உரிமை என்பது சமஅனுபவம் என்பதாகும். இந்நாட்டில் பார்ப்பனியத்தால் -சாதியால் கீழ்ப்படுத்தப்பட்ட மக்களுக்குச் சம உடைமை இருந்தாலும் சம உரிமை இல்லை என்பது குருடனுக்கும் தெரிந்த விஷயமாகும். அதனாலேயே அவர்கள் உடைமை கரைந்துகொண்டே போகிறதுடன் உடைமைக்கு ஏற்ற அனுபவமும் இல்லாமல் இருக்கிறார்கள்.

உதாரணமாக, பார்ப்பனரல்லாதார்களில் எத்தனையோ கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகள் இருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு , சாதாரண ஒரு பிச்சைக்காரப் பார்ப்பானுக்குள்ள "பொது உரிமை'' இல்லை. ஆனால் தனி உரிமை உள்ள ஒரு கீழ்த்தரப் பிச்சைக்காரப் பார்ப்பானுக்கு உடைமை அடியோடு இல்லா விட்டாலும், அவனுடைய போக போக்கியம் குறைவுபடுவதே இல்லை. அன்றியும், பாடுபடாமலும் கை முதல் இல்லாமலும் தனக்குள்ள தனி உரிமை காரணமாகவே , தன் மகனை அய்.ஏ.எஸ். படிக்கவைத்து, ஜில்லா கலெக்டர், ஜில்லா ஜட்ஜ், ஏன் அய்க்கோர்ட் ஜட்ஜாகவும் , சங்கராச்சாரி, ஜீயராகவும் ஆக்க முடிகிறது.

<u>பொதுஉரிமை இல்லாத நாட்டில்</u>

இந்த நிலையில் தனிஉரிமைகளும் உள்ள ஒரு நாட்டில் முதலில் தனிஉரிமையை ஒழித்துவிட்டோமானால், தனி உடைமையை மாற்ற அதிகம் பாடுபடாமலேயே பொதுவுடைமையும் நிலைத்து நிற்கும். பொதுஉரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை, மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடத்தில் தான் போய்ச் சேர்ந்து கொண்டு இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்தின் பாடமாகும்.